# பத்திரிக்கை செய்தி

பூம்புகாரில் அமைந்துள்ள மா சா சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், மயிலாடுதுறை மாவட்டத்தில் மீனவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் தொடங்குதல் மற்றும் மீன் சார்ந்த வணிகத்தை ஊக்குவிப்பதற்கான மீனவர் உற்பத்தியாளர்கள் பங்குதாரர்கள் கூட்டத்தினை இன்று (05.05.2023) காலை 11.30 மணி அளவில் ஏற்பாடு செய்திருந்தது.

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) ஹைதராபாத் மூலமாக பகுதி அடிப்படையிலான வணிக ஊக்குவிப்பு அமைப்பு மா சா சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் நிறுவப்பட்டுள்ளது. நம் தமிழ்நாட்டில் முதன் முதலாக நிறுவப்பட்டுள்ள இந்த அமைப்பின் மூலமாக மூன்று மீனவர் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் புதுச்சேரி பகுதியில் தொடங்கப்படவுள்ளது

அதன் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட மீனவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்களின் பங்குதாரர்கள் கூட்டத்தினில் சிறப்பு விருந்தினராக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் திரு. மகா பாரதி IAS அவர்கள் கலந்து கொண்டு இந்த பகுதி அடிப்படையிலான வணிக ஊக்குவிப்பு அமைப்பு திட்டத்தின் சிறப்புகளை மீனவ மக்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் மாவட்ட ஆட்சியர் தனது சிறப்புரையில் அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் செயல்பாடுகளானமீனவ நண்பன் செயலி, மீன் உணவு பதப்படுத்தும் மையம், ஒருங்கிணைந்த மீன் பண்ணையம், செயற்கை பவளப்பாறைகள் மூலம் மீன்வளத்தை பெருக்குதல், மீன் குஞ்சு பொறிப்பகம் போன்ற திட்டங்கள் மூலம் மீனவர்கள் மற்றும் உள்நாட்டு மீன் விவசாயிகளின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு முக்கிய பங்குவகிக்கிறது என்று எடுத்துரைத்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தேசிய மீன் மரபணு ஆராய்ச்சி பணியகம், லக்னோ மற்றும் அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் இணைந்து மயிலாடுதுறை மாவட்டத்தில் செயல் படுத்தும் அட்டவணைப்படுத்தப்பட்ட சாதி துணைத் திட்டம் (Scheduled caste sub plan) மூலம் பயன்பெற்ற 100 மீன்வளர்ப்போர்களுக்கு ரூபாய் 10 லட்சம் மதிப்பிலான மீன் தீவனம் மற்றும் மீன் வலைகளை வழங்கினார்.

மா. சா சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின், அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி னமயத்தின் தலைவர் முனைவர். S வேல்விழி அவர்கள்CBBO – FFPO யின் எதிர்கால செயல்பாடுகள் பற்றி விளக்கி கூறினார். மேலும் இந்நிகழ்ச்சியில் முக்கிய பங்குதார்களான மீன் வளத்துறை உதவி இயக்குனர் திரு ராஜேஷ் குமார், IOB மாவட்ட வங்கி மேலாளர் திரு முத்துசாமி, வேளான் பொறியியல் விரிவாகக் மையத்தின் உதவிபொறியளார், காவிரிப்பூம்பட்டினம்IOB கிளைமேலாளர் திரு நிஷாந்து மற்றும் 100 மேற்பட்ட மீனவர்கள் , மீனவ பெண்கள் மற்றும் மீன் வளர்ப்போர் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்கனை தெரிவித்தனர்.